# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035 259

1. District மாவட்டம் : Chennai | PS: காவல்நிலையம் V&AC, HQ | Year: ஆண்டு 2017 | FIR No.: மு.த.அ. எண் 8 | Date: நாள் 15.12.2017

2. (i) Act சட்டம்: Cr. PC — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 14.12.2017 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 16.15 hrs — Time to : நேரம் வரை 21.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.12.2017 — Time : நேரம் 17.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — About 20 K.m, North East
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — Tmt. V. Sumathi — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் District Inspection cell officer — (g) Address : முகவரி District Inspection Cell, Collectorate, Chennai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. A.N. Murugadasan, Executive Engineer, Egmore Division, TANGEDCO, CHENNAI.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Liquid Cash Rs. 1,50,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Details are given in Separate sheets enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. SANKAR Rank ......DSP.......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.12.2017 / 19.00 hrs

Name: பெயர் S. SANKAR.....
Rank: நிலை .....DSP.........No. எண் ..........

FIR Continuation (Column – 12)

Today on 15.12.2017 at 17.00 hrs, while I was on duty at O/o the Special Investigation Cell, Vigilance and Anti-Corruption, Alandur, Chennai-16, I received a complaint from Tmt.V.Sumathi, Deputy Collector / District Inspection Cell Officer, Chennai District, Chennai-1 enclosed with the proceedings of the Joint Surprise Check conducted on 14.12.2017 at office of the Executive Engineer, Egmore Division, TANGEDCO, Chennai at No.47, Malaiyappan Street, Oteri, Chennai-12. The complaint and the proceedings run as follows: அனுப்புநர் திருமதி.வே.சுமதி, துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம், சென்னை-1, பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. அ/783/2017 நாள் - 14.12.2017 அய்யா பொருள் இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-12, ஓட்டேரி, மலையப்பன் தெரு, நெ.47 என்ற முகவரியில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற் பொறியாளர் அலுவலகம், எழும்பூர் கோட்ட அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 14.12.2017 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக. சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 14.12.2017-ம் தேதி சென்னை-12, ஓட்டேரி, மலையப்பன் தெரு, நெ.47 என்ற முகவரியில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற் பொறியாளர் அலுவலகம், எழும்பூர் கோட்டம் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) (ஆவணங்கள் ரூ.1 லட்சம் வைத்திருந்த மஞ்சள் நிற பிளாஸ்டிக் கவர் மற்றும் ரூ.50,000/-த்துடன் இருந்த சிறிய துண்டு சீட்டு) மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, (ஒப்பம்/-XXX வே.சுமதி) 14.12.2017. மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர், சென்னை-1. இணைப்பு- மேற்கண்டவாறு சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (14.12.2017) சென்னை-12, ஓட்டேரி, மலையப்பன் தெரு, எண்.47-ல் செயல்பட்டு வரும் சென்னை மத்திய மின்பகிர்மான வட்டம், எழும்பூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை. இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: (1) திருமதி.வே.சுமதி, மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர், சென்னை மாவட்டம், சென்னை-1, (2) திரு.எஸ்.சங்கர், காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, (3) திரு.ஆ.அண்ணாமலை, காவல் ஆய்வாளர், சிறப்புப்

புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (4) திருமதி.ஜூடி அபிகெய்ல், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. சென்னை-12, ஓட்டேரி, மலையப்பன் தெரு, எண்.47 என்ற முகவரியிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய சென்னை எழும்பூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அரசு பணிகளை செய்வதற்கு லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி செயற்பொறியாளர் அலுலகத்தில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (14.12.2017) மாலை சுமார் 4.15 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. 2. இந்த கூட்டுத்தணிக்கையின்போது செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்த பணியாளர்களிடம் தங்களிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது A-2 இருக்கையின் உதவியாளர் திருமதி.என்.பரிமளா என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.2,000/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.2,000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேற்படி செயற்பொறியாளர் அலுவலக நிர்வாக மேற்பார்வையாளர் திரு.எஸ்.பூவராகவன் அவர்கள் தன்னிடமிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.8,000/- இருந்தது. இந்த பணம் குறித்து கேட்க தனது சொந்தப் பணம் என்றும் ATM மையத்திலிருந்து 09.12.2017 அன்று ரூ.10,000/- அவரது வங்கிக் கணக்கிலிருந்து எடுத்ததற்கான செல்போன் குருஞ்செய்தியை சோதனையின்போது காண்பித்தார், மேலும் செலவு போக ரூ.8,000/- வைத்திருந்ததாக கூறினார். இந்த விளக்கம் ஏற்புடையதாக தெரியவே மேற்படி பணம் ரூ.8,000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. தொடர்ந்து வணிக உதவியாளர் திரு.ஜி.கிருபாகரன் என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்த்ததில் ரூ.2,000/- இருந்தது. இந்தப் பணம் குறித்து கேட்க தனது சொந்த பணம் என்றும் செலவுக்காக வைத்திருந்ததாக கூறினார். இந்த விளக்கம் ஏற்புடையதாக தெரியவே அந்தப் பணம் ரூ.2,000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 3. தொடர்ந்து செயற்பொறியாளர் திரு.ஆ.நா.முருகதாசன் அவர்களிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவரிடம் பணம் ஏதும் உள்ளதா எனக் கேட்க அவர் தனது இடதுபுற சட்டை பாக்கெட்டிலிருந்தும் மற்றும் இடதுபுற பான்ட் பாக்கெட்டிலிருந்தும் பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை தணிக்கைக்குழு எண்ணிப்பார்த்ததில் மேல்சட்டை பாக்கெட்டில் ரூ.530/-, இடதுபுற பான்ட் பாக்கெட்டில் (50x Rs.500) ரூ.25,000/- மற்றும் (50x Rs.500) ரூ.25,000/- என தனித்தனியாக மடித்து வைக்கப்பட்டு இருந்தது. அந்த ரூ.530/- ல் நூறு ரூபாய் நோட்டுகள் நான்கும், ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றும், இருபது ரூபாய் நோட்டு ஒன்றும், பத்து ரூபாய் நோட்டுகள் ஆறும் இருந்தது. பின்னர் அவரது மேஜையின் இடது பக்கம் அடுக்கை (Rack) ஆய்வு செய்ததில் இரண்டாவது அடுக்கில் ஒரு மஞ்சள் பிளாஸ்டிக்

பையில் பணம் சுற்றி வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. 4. ஆய்வுக்குழு கேட்டுக்கொண்டதின்பேரில் மேஜை அடுக்கிலிருந்து எடுத்து அவர் ஆஜர் செய்த பணம் 5 தனித்தனி கட்டுகளாக இருந்தது. அவற்றில் 10 நோட்டுக்கள் கொண்ட இரண்டாயிரம் ரூபாய் கட்டு ஒன்று (10xRs.2000), நூறு நோட்டுக்கள் கொண்ட ஐநூறு ரூபாய் தாள் கட்டு ஒன்றும் (100xRs.500), நூறு நோட்டுக்கள் கொண்ட நூறு ரூபாய் தாள் கட்டுகள் மூன்றும் (300xRs.100) இருந்தது. இந்த பணத்தின் ஐநூறு ரூபாய் கட்டில் ஒரு துண்டு சீட்டு இறுக்க கட்டிவைக்கப்பட்டிருந்தது, அந்த துண்டு சீட்டில் கீழ்கண்டவாறு நீல மையினால் எழுதப்பட்டிருந்தது. AE/7wells, 3O, 1O, 6+4 New service 4 Addl, 5, AE/East Sowcarpet, -, - , AE/Central, 11, - , 9 வீரப்பன், 40 நாட்டுபிள்ளையார், Rs.50 thousand, 9 வீரப்பன், 40 thousand Rs. 5. இந்த எழுதப்பட்ட விவரங்கள் குறித்து செயற்பொறியாளர் திரு.முருகதாசனிடம் கேட்க அவர் இன்று (14.12.2017) மாலை சுமார் 3.45 மணியளவில் தனது அதிகார வரம்பிற்குட்பட்ட சௌகார்பேட்டை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.வேலுச்சாமி அவர்கள் தனது அலுவலகத்திற்கு வந்து தன்னை சந்தித்தாகவும் அவர்தான் இந்த பணத்தை வைத்துவிட்டு போனார், எதற்காக வைத்தார் என்று தெரியவில்லை என்று கூறினார். இதில் AE/7wells, AE/East Sowcarpet, AE/Central என்பது சௌகார்பேட்டை உதவி செயற்பொறியாளரின் கீழ் பணியாற்றும் ஏழுகிணறு, சௌகார்பேட்டை கிழக்கு மற்றும் சௌகார்பேட்டை சென்ட்ரல் ஆகிய பிரிவு அலுவலகங்களில் பணியாற்றும் உதவிப் பொறியாளர்களை குறிக்கும் என்றும் 3O மற்றும் 1O என்பது மும்முனை மற்றும் ஒருமுனை மின் இணைப்பை குறிக்கும் என்றும் 6+4 என்று எழுதப்பட்டிருப்பது 6 புதிய மின் இணைப்புகளையும், 4 கூடுதல் மின் இணைப்புகளையும், 5 என்று குறிக்கப்பட்டிருப்பது 5 ஒருமுனை மின் இணைப்பையும் 11 என்று குறிக்கப்பட்டிருப்பது சௌகார்பேட்டை சென்ட்ரல் உதவிப் பொறியாளர் 11 மும்முனை மின் இணைப்பு வழங்கியிருப்பதையும், 9 வீரப்பன் என்பது சௌகார்பேட்டையில் உள்ள வீரப்பன் தெரு என்பதையும், 40 நாட்டு பிள்ளையார் என்பது நாட்டு பிள்ளையார் கோவில் தெருவையும், Rs.50 thousand மற்றும் 40 thousand Rs என்பது பணத்தையும் குறிக்கும் என்று கூறினார். 6. செயற்பொறியாளரிடமிருந்த மேற்படி ரூபாய் நோட்டுகளின் மொத்த கூட்டுத்தொகை ரூ.1,50,530/- ஆகும். ரூ.1,50,530/-ல் சௌகார்பேட்டை உதவி செயற்பொறியாளர் வைத்துச் சென்றதாக செயற்பொறியாளர் குறிப்பிட்ட பணம் ரூ.1 லட்சத்தை தவிர மீதமுள்ள ரூ.50,530/- குறித்து அவரிடம் கேட்க தனது சொந்த பணம் என்று கூறினார். இதை உறுதி படுத்தும் விதமாக எந்த ஆவணமும் காண்பிக்கப்படாததால் மேற்படி பணம் ரூ.1,50,000/- அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மீதமுள்ள ரூ.530/- அவரது செலவுக்காக அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது செயற்பொறியாளர் அறையில் செயற்பொறியாளர் திரு.முருகதாசன் என்பருக்கு எதிரே கீழ்பாக்கம் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.கே.ராஜசேகர் மற்றும் புரசைவாக்கம் உதவிப் பொறியாளர் திரு.ஆர்.மாரிமுத்து ஆகிய இருவரும் அமர்ந்திருந்தனர். கீழ்பாக்கம் உதவி செயற்பொறியாளர் திரு.ராஜசேகர் அவர்கள் தனது

கட்டுப்பாட்டில் உள்ள கீழ்பாக்கத்தில் கோயில் தெருவில் மேற்கொள்ளப்பட வேண்டிய மின் வாரியபணிகள் குறித்து செயற்பொறியாளரிடம் விளக்குவதற்காக வந்ததாக தெரிவித்தார். புரசைவாக்கம் பிரிவு உதவிப் பொறியாளர் திரு.ஆர்.மாரிமுத்து அவர்கள் அவரது பகுதிக் குட்பட்ட ஓட்டேரி சூளைமேடு தெருவில் உள்ள மின் பழுதை சரி செய்த தகவலை செயற்பொறியாளரிடம் சொல்வதற்காக வந்ததாக தெரிவித்தார். மேற்படி இரண்டு அலுவலர்களும் செயற்பொறியாளரிடம் ஆய்வு செய்து பணத்தை கைப்பற்றும்போது உடனிருந்தார்கள். 7. இந்த கூட்டுத்தணிக்கையின்போது பணம் ரூ.1,50,000/- மற்றும் பணத்துடன் வைக்கப்பட்டிருந்த மேற்படி காகித துண்டுச் சீட்டு ஆகியவை மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து செயற்பொறியாளர் அலுவலகத்தின் பிரதான அறையின் நுழைவு வாயில் பகுதியில் கருப்பு நிற ரெக்சின் பேக்குடன் இருவர் இருந்தனர். அவர்கள் யார் என்று கேட்க ஒருவர் தனது பெயர் ஜி.விஜயன் ஆ/வ.25/2017, த/பெ. ஞானபிரகாசம், எண்.45, விநாயகர் தெரு, அமுதூர், வந்தவாசி தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் என்றும் தான் சென்னை தேனாம்பேட்டையிலுள்ள CMS Marshall Ltd. என்ற நிறுவனத்தில் பணியாளராக (Employee Code.1107157) பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருடனிருந்த மற்றொருவரின் பெயர் கா.ராதாகிருஷ்ணன், ஆ/வ.24/2017, த/பெ.காந்தி, எண்.27, குறுந்தன்குடி, சிவகங்கை தாலுகா மற்றும் மாவட்டம் என்றும் அதே CMS Marshall Ltd. என்ற நிறுவனத்தில் பணியாளராக (Employee Code.1108195) பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். இருவரிடமும் பையில் என்ன வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு மொத்தம் ரூ.6,00,853/- பணம் வைத்திருப்பதாகவும், இந்த பணம் செயற்பொறியாளர் அலுவலகத்திலுள்ள கூக்ஸ் சாலை வருவாய் மேற்பார்வையாளரிடமிருந்து ரூ.3,45,233/-ம், ஓட்டேரி கணக்கீட்டு ஆய்வாளரிடமிருந்து ரூ.2,55,620/-ம் வாங்கிக் கொண்டு தங்களது அலுவலகத்திற்கு செல்வதாக கூறினார்கள். இந்த இருவரிடமும் தாங்கள் TANGEDCO நிறுவனத்தால் பணம் எடுத்துசெல்ல அங்கீகரிக்கப்பட்டதற்கான ஆதாரத்தை அளிக்கவில்லை. எனவே சந்தேகத்தின் அடிப்படையில் சென்னை மத்திய மின் பகிர்மான வட்ட கண்காணிப்பு பொறியாளர் திரு.சேரலாதன் அவர்களுக்கு தகவல் தெரிவித்து வரவைத்து மேற்படி பணம் ரூ.6,00,853/-ஐ அவரிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (14.12.2017) இரவு சுமார் 9.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது செயற்பொறியாளர் திரு.ஆ.ந.முருகதாசன் மற்றும் உதவி செயற்பொறியாளர் திரு.கே.ராஜசேகர் மற்றும் உதவிப் பொறியாளர் திரு.ஆர்.மாரிமுத்து ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது.

(ஒப்பம்/-XXX) 14/12/17
S.SANKAR,
DSP/SIC-I, DVAC, Chennai-16

(ஒப்பம்/-XXX) 14/12/17
ஆ.ந.முருகதாசன்,
செயற் பொறியாளர், எழும்பூர் கோட்டம்,
சென்னை-12.

(ஒப்பம்/-XXX) 14/12/2017
வே.சுமதி,
DISTRICT INSPECTION
CELL OFFICER, CHENNAI-1

(ஒப்பம்/-XXX) 14/12/17
(A.ANNAMALAI)
Inspector of Police, SIC,
DVAC, Chennai-16.

(ஒப்பம்/-XXX) 14/12/17
க.ராஜசேகரன்,
உதவி செயற் பொறியாளர்,
கீழ்பாக்கம்.

(ஒப்பம்/-XXX) 14/12/17
ர.மாரிமுத்து,
உதவி பொறியாளர் / இ&பரா,
புரசைவாக்கம்.

(ஒப்பம்/-XXX) 14/12/17
(JUDY ABIGAIL)
Inspector of Police / SIC / DVAC.

I hereby authorize
DFC / Central to receive
the cash & for progress
remittance.
Seralathan, 14/12
SE/CEDC/Central.

(ஒப்பம்/-XXX) 14/12/2017
(S.BHUVARAGAVAN)
ADM, SUPr

Received cash Rs.6,00,853/- (Rupees Six lakhs and eight hundred and fifty three only)
(Sd/------) 14/12/17
(H.BALAVENKATAKUMAR)
DFC / CEDC

(Sd/------) 14/12/17
(G.VIJAYAN)
CDP, Chennai.

G.RADHAKRISHNAN,
14/12/17
CDP - Chennai.

The above complaint was registered in V&AC, HQrs, Cr.No.8/2017/AC/HQ u/s 102 Cr.PC and 13 (2) r/w 13 (1) (d) of Prevention of Corruption Act 1988 on 15.12.2017 at 18.00 hrs. (Sd.XXXX DSP, SIC-I)

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, statement of accused, Statement of Tr.K.Rajasekar, AEE and statement of Tr.R.Marimuthu, AE, Cash Rs.1,50,000/- with a original piece of paper containing details about money seized are submitted before the Hon'ble Special Judge for cases under the Prevention of Corruption Act 1988, Chennai.

(S.Sankar)
Deputy Superintendent of Police,
Special Investigation Cell-I,
Vigilance and Anti-Corruption,
Chennai-16.